1974 ஆகஸ்ட் 12]

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, மத்திய அரசை விரைவுபடுத்தச் சொல்லி நாம் கேட்டுக் கொண்டிருக்கிறோம்.

திரு. கே. எஸ். குமாரசாமி: தலைவரவர்களே, நமக்கு மின்சாரப் பற்றுக்குறை ஏற்பட்டுள்ளதால், இப்படிப்பட்ட மின்சார ரயில் விடுவதைத் தவிர்த்து, டீசல் இன்ஜின் அல்லது நீராவி இன்ஜின் மூலம் அப்படிப்பட்ட வேலைகளைச் செய்வதற்கு தமிழக அரசு மத்திய அரசுக்கு ஆலோசனை கூறுமா? எதை எப்படிச் செய்ய வேண்டும் என்பதற்கு ஆலோசனை கூறுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, மின்சார ரயில் விடுவதற்கு ஒப்புதல் அளிப்பதற்கு முன்பு மின்சார உற்பத்தியைக் கணக்கில் எடுத்துக் கொண்டு தான் ஒப்புதல் அளித்து இருக்கிறோம்.

கிழக்குக் கடற்கரைச் சாலை

*10 வினா.—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கிழக்குக் கடற்கரைச் சாலையில் புதிய பாலங்கள் எங்கெங்கு கட்டப்படவிருக்கின்றன?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: விவர அறிக்கை @ பேரவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. என். கிட்டப்பா: தலைவரவர்களே, விவர அறிக்கையில் கிழக்குக் கடற்கரைச் சாலையில் 40 இடங்களில் பாலங்கள் கட்டப்படவிருக்கின்றன என்ற விவரம் இருக்கிறது. சென்னையிலிருந்து தஞ்சை மாவட்டத்திற்குச் செல்கிற வழியில் சிதம்பரத்திற்கு அருகில் வெள்ளாற்றின் குறுக்கே ஒரு பாலம் கட்ட வேண்டுமென்ற வேண்டுகோளை ஏற்று, அது கட்டப்பட விருப்பதாகவும், அதற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ. 75 லட்சம் இந்த கிழக்குக் கடற்கரைச் சாலை மதிப்பீட்டில் சேர்த்து இருப்பதாகவும் செய்தி வந்தது. ஆனால் இப்போதுள்ள நிலையில் அது சேர்க்கப்படவில்லை. என்பதை நினைவுபடுத்தி, அதற்கு

@ 106-116-ம் பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சிடப் பட்டுள்ளது.

இனிமேலாகிலும் நிதி ஒதுக்கி, அந்தப் பாலத்தைக் கட்டுவதற்கு அரசு முன்வருமா என்பதை நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, அந்தப் பாலத்தைப் பற்றி தனிக் கேள்வி போட்டால், விவரம் சேகரித்து பதில் அளிக்கலாம்.

திரு. சோ. அழகர்சாமி: தலைவரவர்களே, கிழக்குக் கடற்கரைச் சாலைக்கான பணிகள் துவக்கப்பட்டு பல ஆண்டுகள் ஆகின்றன. அது எப்போது முடிவுறும், இப்போது எந்த அளவுக்கு வேலைகள் முடிந்து இருக்கின்றன என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, பாதை அமைப்பு முறை இன்னும் ஒப்புக்கொள்ளப்படவில்லை. பாலங்கள் சில கட்டப்படுவதற்குத்தான் மத்திய அரசு ஒப்புக் கொண்டிருக்கிறது. அதைத்தான் நாம் இப்போது செய்து கொண்டிருக்கிறோம். பாதை அமைப்பு முறை—அதாவது அலைன்மென்ட் ஆப் தி ரோட்—இன்னும் ஒப்புக்கொள்ளப்படவில்லை. மத்திய அரசிடம் அதை நாம் வற்புறுத்திக் கொண்டிருக்கிறோம்.

தாராட்சி கிராமத்திற்கருகே பாலம்

***11 வினா.—திரு. கா. வேழவேந்தன்:** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருவள்ளூர் வட்டம், தாராட்சி கிராமத்தருகில் பொதுப் பணித் துறைக் கால்வாயின் மேல் அமையும் சிறு பாலத்தைக் கட்டி முடிப்பதில் ஏற்படும் காலதாமதத்திற்கான காரணங்கள் யாவை?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: திருவள்ளூர் வட்டம் தாராட்சி கிராமத்தில் சுரட்டப்பள்ளி வரவு கால்வாயின் குறுக்கே ஒரு நடைப்பாலம் கட்ட ரூ. 27,700-க்கு பொதுப் பணித் துறை அரசு ஆணை எண். 3736, நாள் 15—12—73-ல் ஒப்பகல் அளிக்கப்பட்டு இவ்வேலைக்கான ஒப்பந்தம் ஏற்றுக்கொள்ளப்பட்டு, மேற்கொண்டு வேலையைத் துவக்குவதற்கான முன்னேற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.